**THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI**

**MOST REV. ALBERT G.A. ANASTHAS D.D., S.T.D.**

**Bishop of Kuzhithurai**

: 04651 272077

: 9442451130

Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.

CH/BP/CIR - 1/2024 நவம்பர் 05, 2024

**தமிழகக் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் சமூக, பொருளாதாரக் கணக்கெடுப்பு 2024-2025**

**அன்பு அருள்பணியாளர்களே, இறைமக்களே,**

அனைவருக்கும் இறை இயேசுவின் பெயரில் இனிய வாழ்த்துகள்!

தமிழகக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையானது தமிழகக் கத்தோலிக்க கிறித்தவர்கள் குறித்த சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்பு 2024-25-ஐ மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

**நோக்கம் :**

1. தமிழகக் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் சமூகப் பொருளாதார நிலை குறித்த விரிவானப் புள்ளி விபரங்களை அறிதல்.
2. இவ்விபரங்கள் அடிப்படையில் விரிவான ஆய்வினை மேற்கொள்ளல்.
3. நம் மக்களுக்கான செயல்பாடு திட்டங்களைத் திட்டமிடல்.
4. அரசிடம் நம் உரிமைகளுக்கான, உரியவற்றைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**மூன்று கட்டப் பணிகள்:**

இக்கணக்கெடுப்பு நடத்துவதற்கான முதற்கட்டப்பணி வட்டார அளவில் நடைபெறும். இதனை வட்டார முதன்மைப் பணியாளர்கள் ஒருங்கிணைப்பர். பங்கு/கிளைப்பங்குகளிலிருந்து ஒருவர், பெரிய பங்கு எனில் இரு நபர்கள் பங்கேற்றுப் பயிற்சி பெறுவர். இதில் பங்கேற்போர் பங்கு அளவில் கணக்கெடுக்கும் பணியின் ஒருங்கிணைப்பாளராக இருப்பர். இவர்களுக்கு தமிழகக் கணக்கெடுப்புக் குழு பயிற்சி வழங்கும். இவர்கள் பட்டதாரியாக, துடிப்பான இளைஞராக/இளம்பெண்ணாக, ஆன்ட்ராய்டு செயலியை, கைப்பேசியை நன்கு பயன்படுத்துகின்ற நுட்பங்களைத் தெரிந்தவராக இருக்க வேண்டும். வட்டார அளவிலானப் பயிற்சியானது இம்மாதம் 16, 17 ஆகிய நாட்களில் வட்டார மையங்களில் நடைபெறும்.

இரண்டாம் கட்டமானது பங்களவில் நடைபெறும் பணியாகும். பங்குத்தந்தையரின் தலைமையில் பங்கிற்கான ஒருங்கிணைப்பாளரால் செயல்படுத்தப்படும். இவர்கள் அன்பியங்கள்தோறும் எல்லா வீடுகளையும் சந்தித்துப் புள்ளிவிபரம் எடுப்பதற்கான நபர்களை அழைத்துப் பங்களவில் பயிற்சி கொடுத்து உரிய காலத்தில் கணக்கெடுப்புப் பணிகளை முடித்திட வேண்டும்.

இறுதிகட்டமாக தமிழகக் கணக்கெடுப்புப் பொறுப்பாளர்கள் பங்குகளிலிருந்து வழங்கும் தரவுகளைத் தொகுத்து ஆய்வு செய்து, இறுதி அறிக்கையை ஜுலை 2025-க்குள் தமிழக ஆயர் பேரவைக்கு வழங்குவர். இக்கணக்கெடுப்புப் பணிகளுக்கானச் செலவுகளை அந்தந்த பங்குகளேப் பொறுப்பெடுத்துச் சிறப்பாக செயல்படுத்த அன்புடன் வேண்டுகிறேன்.

தமிழக ஆயர்கள் பேரவை முன்னெடுக்கும் இம்மாபெரும் இன்றியமையாத முயற்சிக்கு நாம் அனைவரும் முழு ஒத்துழைப்புத் தருவோம். இது குறித்த விரிவானச் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் வட்டார முதன்மைப் பணியாளர்களுக்கும், பங்குப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும்.

ஆண்டவரின் ஆசி உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,**

+ G. Albert

MOST REV. ALBERT G.A. ANASTHAS ★ BISHOP OF KUZHITHURAI ★

**மேதகு ஆயர் ஆல்பர்ட் G. A. அனஸ்தாஸ்,**
**குழித்துறை மறைமாவட்டம்.**

குறிப்பு: இச்சுற்றறிக்கை குழித்துறை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும், கிளைப் பங்குகளிலும் நவம்பர் 09, 2024 ஞாயிறுத் திருப்பலியில் அறிவிப்பின்போது அறிவிக்குமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

# THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

**Fr. Antony M. Muthu**
**Chancellor**

Bishop's House
Post Box No. 1
Unnamalaikadai - 629 179
Kanyakumari District
Tamilnadu, India

Off : 9444688225 www.kuzhithuraidiocese.com chancellor.rcdk@gmail.com

**CH/L-8/2024** நவம்பர் 05, 2024

பாசத்திற்குரிய அருட்பணியாளர்களே!

இனிய வாழ்த்துக்கள்!

தமிழ்நாடு ஆயர் பேரவை தமிழ்நாடு முழுவதும் உள்ள கத்தோலிக்க இறைமக்களது சமூகப் பொருளாதார கணக்கெடுப்பினை நடத்துகிறது. இதனை நமது மறைமாவட்டத்தில் செயல்படுத்த நமது ஆயர் அவர்களும் **CH/BP/CIR-1/2024,** நவம்பர் 05, 2024 தேதியிட்ட சுற்றறிக்கை வழியாக மறைமாவட்ட அனைத்து அருள்பணியாளர்களுக்கும், இறைமக்களுக்கும் அறிவித்துள்ளார்கள்.

இதன் முதற்கட்டமாக ஒவ்வொரு பங்கு/கிளைப் பங்குகளிலிருந்தும் ஒரு நபருக்கு (பெரிய பங்கு என்றால் 2 நபர்கள்) எவ்வாறு கணக்கெடுப்பினைச் செய்ய வேண்டும் என்பதற்கான பயிற்சியினை தமிழகப் பயிற்சிக்குழு வழங்கும். இந்தப் பயிற்சியைப் பெறுபவர்கள் பங்குத்தந்தையுடன் கலந்தாலோசித்துப் பங்கின் கணக்கெடுப்பினை நடத்திட எத்தனை நபர்கள் தேவையோ அத்தனை நபர்களுக்கும் பங்களவில் பயிற்சி வழங்கி, பங்கின் கணக்கெடுப்பின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவர். பயிற்சியின்போது Kobo tool box மென்பொருளை Scan செய்து பயிற்சியைப் பெற்றிட ஆன்ட்ராய்டு கைப்பேசி கொண்டு வரவேண்டும். பங்கின் ஒருங்கிணைப்பாளரும், ஒவ்வொரு பங்கிலிருந்தும் பங்கின் கணக்கெடுப்பிற்காக தேர்வு செய்யப்படுபவர்களும் பட்டதாரியாகவோ, துடிப்பான இளைஞராகவோ, இளம்பெண்ணாகவோ, ஆண்ட்ராய்டு கைபேசியை நன்கு பயன்படுத்துகின்ற நுட்பங்களை தெரிந்தவராகவோ இருக்க வேண்டும். கணக்கெடுப்பினை கோபோ உபகரண மென்பொருள் (Kobo tool box software) பயன்படுத்தி எடுக்க வேண்டும். ஒரு கேள்விப்பட்டியலை பூர்த்தி செய்ய ½ மணி நேரம் முதல் ¾ மணி நேரம் வரை ஆகலாம்.

முதற்கட்டப் பயிற்சியானது இம்மாதம் 16 மற்றும் 17 ஆம் தேதிகளில் நடைபெறும். அதன் அட்டவணை:

| நாள் | நேரம் | வட்டாரம் | இடம் |
|---|---|---|---|
| 16.11.2024 | 09.30 - 12.30 | முளகுமூடு | அன்னை ஆதா மையம், அழகியமண்டபம் |
| 17.11.2024 | 02.00 - 05.00 | காரங்காடு | தச்சன்பறம்பு ஆலய அரங்கம், திங்கள்நகர் |
| 16.11.2024 | 09.30 - 12.30 | மாத்திரவிளை | வட்டார அலுவலக அரங்கம், கருங்கல் |
| 17.11.2024 | 02.00 - 05.00 | திரித்துவபுரம் | தூய ஜோசப் மேல்நிலைப் பள்ளி, திரித்துவபுரம் |
| 16.11.2024 | 02.00 - 05.00 | வேங்கோடு | தூய ஆரோக்கிய அன்னை ஆலயம், முஞ்சிறை |
| 16.11.2024 | 02.00 - 05.00 | புத்தன்கடை | பல்லோட்டி மண்டபம், குலசேகரம் |

இப்பயிற்சி பெற்றவர்கள் பங்குகளில் கணக்கெடுப்பவர்களுக்கு பயிற்சி வழங்குவர்.

இரண்டாவது கட்டப் பயிற்சியானது, ஒவ்வொருப் பங்குகளிலும் பங்குத்தந்தையரின் வழிகாட்டுதலில் பங்கில் கணக்கெடுப்பு நடத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும், பங்கிலிருந்து வட்டாரத்திற்கு அனுப்பப்பட்டு பயிற்சி பெற்ற நபர் பயிற்சி வழங்குவார். இதனைத் தொடர்ந்து பங்கில் உள்ள எல்லா குடும்பங்களையும் சந்தித்து கணக்கெடுப்பு நடத்துவர். இரண்டாம்கட்டப் பயிற்சி பங்களவில் இம்மாதம் 17-ஆம் தியதிக்குப்பின் ஓரிரு வாரத்தில் எல்லாப் பங்குகளிலும் நடைபெற்றிருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து மார்ச் 2025-க்குள் பங்கு முழுவதும் கணக்கெடுப்பு முடித்துத் தகவல்களைத் தமிழகத் தலைமை இடத்திற்கு அனுப்பி வைப்பர்.

இப்பணியினை சிறப்பாக செய்து முடித்திட உங்களை வாழ்த்துகின்றேன்.

பணித்தோழமையில்,

அருள்பணி. அந்தோணி M. முத்து
மறைமாவட்ட செயலர்

DIOCESE OF KUZHITHURAI CHANCELLOR UNNAMALAIKADAI

குறிப்பு : இதுகுறித்த விளக்கங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண். 9444688225